பக்கங்கள் 20+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 28 வெள்ளிக்கிழமை 11.04.2025 | அதிர்வு 251


## 22 இந்தியப் பிரஜைகள் இராஜகிரியவில் கைது!



காலாவதியான விசாவைப் பயன்படுத்தி சட்ட விரோதமாக நாட்டில் தங்கியிருந்த 22 இந்தியப் பிரஜைகள் குடிவரவு 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# வடக்கு, கிழக்குக்கும் நீதியின் கதவுகள் திறக்கப்பட வேண்டும்

## தமிழரசு எம்.பி. ஸ்ரீநேசன் வலியுறுத்து

“பட்டலந்த வதை முகாமில் பயிற்சி பெற்றவர்கள், மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் ஒரே இரவில் 186 பேரைக் கொலை செய்தனர். இப்படி வடக்கு, கிழக்கில் பல வதைகளும், கொலைகளும் இடம் பெற்றுள்ளன. எனவே, வடக்கு, கிழக்குக்கும் நீதியின் 02

# குடாநாட்டில் தேர்தல் விதிமுறைகளை மீறி பிரதமர் பங்கேற்கும் பரப்புரைக் கூட்டங்கள்

## ஆணைக்குழுவில் முறைப்பாட்டையடுத்து உத்தியோகத்தர்கள் அதிரடி நடவடிக்கை





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்துகொள்ளும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் தேர்தல் விதிமுறைகளை மீறி ஆலயச் சூழலில் நடத்தப்படுகின்றது என்று தேர்தல் ஆணைக் குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு இன்று வருகை தந்துள்ள பிரதமர் பங்குபற்றும் தேர்தல் கூட்டங்களில் காரைநகர் மற்றும் நீர்வேலியில் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டு கூட்டங்களின் மேடைகள் மற்றும் 02

# அடிகாயங்களுடன் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!



நுங்கமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாளிகாதென்ன பகுதியில் உள்ள வீடொன்றின் அறையிலிருந்து அடிகாயங்களுடன் உயிரிழந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் மாளிகாதென்ன, வெயங்கொடை பகுதியைச் சேர்ந்த 50 வயதுடையவர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் நுங்கமுவ பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

# தண்டப்பணம் செலுத்த முடியாத ஆண் ஒருவர் ஆற்றில் மூழ்கிச் சாவு

கசிப்பு வியாபாரம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்துக்கு 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்த முடியாத ஆண் ஒருவர் வாழைச்சேனை, நாசிவன்தீவு ஆற்றில் மூழ்கி உயிரிழந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை இரவு சடலமாக மீட்டுள்ளார் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

முறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 65 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி நபர் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்திவெளி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அவருக்கு எதிராக வழக்குத் தாக்குதல் செய்யப்பட்ட போதிலும் நீதிமன்றின் மூலம் அவரைப் பிணையில் விடுவித்தனர்.

இதனை தொடர்ந்து நீதிமன்றில் தண்டப்பணம் செலுத்துவதற்கு பணத் தேவை ஏற்பட்டதையடுத்து மகளிடம் 30 ஆயிரம் ரூபா பணத்தை கோரியுள்ள நிலையில் அவரிடம் அந்தளவுக்குப் பணம் இல்லாததைத் தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை வீட்டை விட்டு வெளியேறியவர் வீடு திரும்பாத நிலையில் அவரை உறவினர்கள் தேடி வந்துள்ளனர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், நாசிவன்தீவு ஆற்றில் சடலம் ஒன்று நீரில் மூழ்கிய நிலையில் இருக்கின்றது என்று பொலிஸாருக்குப் பொதுமக்கள் அறிவித்த நிலையில் மேற்படி சடலத்தை நேற்று இரவு 10 மணிக்கு மீட்டு பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் பொலிஸார் ஒப்படைத்தனர்.

மேலும்,இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வடக்கு, கிழக்கில்...

கதவுகள் திறக்கப்பட வேண்டும்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

"பட்டலந்த வதை முகாமில் சித்திரவதை தொடர்பில் பயிற்சி பெற்றவர்கள், 1988, 1989 களில் ஜே.வி.பி. இளைஞர்களைச் சித்திரவதை செய்தவர்கள், பின்னர் அப்படியே 1990 காலப்பகுதியில் மட்டக்களப்புக்கு வந்து சித்திரவதைகளைச் செய்தனர்.

குறிப்பாக சத்துருக்கொண்டானின் 1990 ஆம் ஆண்டில் சுற்றிவளைப்பு செய்யப்பட்டு 186 பேர் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இதில் 42 பேர் 10 வயதுக்குட்பட்டவர்கள். அவர்களில் ஐவர் விசேட தேவை உடையவர்கள். இந்த 186 பேரும் வெட்டிக்கொலை செய்யப்பட்டனர்.

இது தொடர்பில் விசாரணை நடைபெற்றது. 35 ஆண்டுகள் கடந்தாலும் இன்னும் நீதி பரிகாரம் கிடைக்கவில்லை. நீதிக்கான கதவை தற்போது திறந்துள்ளீர்கள். வடக்கு, கிழக்கில் இப்படி பல கொலைகள் இடம்பெற்றுள்ளன.

சகலருக்கும் நீதி என்ற அடிப்படையில் உங்களால் வடக்கு, கிழக்குக்கும் நீதியின் கதவுகள் திறக்கப்பட வேண்டும். அநியாயம், அராஜகம் செய்த கொடியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்." – என்றார்.

### 22 இந்திய...

மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இராஜகிரிய பிரதேசத்தில் உள்ள அலுவலகம் ஒன்றில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான இந்திய பிரஜைகள் சுற்றுலா விசாவைப் பயன்படுத்தி இலங்கைக்கு வந்துள்ள நிலையில் விசா காலாவதியான பின்னரும் சட்டவிரோதமாக இராஜகிரிய பிரதேசத்தில் தங்கியிருந்துள்ளனர்.

25 முதல் 35 வயதுக்குட்பட்ட 22 இந்தியப் பிரஜைகளே கைதாகியுள்ளனர் என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்டவர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் திணைக்கள அதிகாரிகள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

### குடாநாட்டில்...

சின்னங்கள் விதிமுறை மீறலாக அமைக்கப்பட்டுள்ளன என்று முறையிடப்பட்டுள்ளது.

முறைப்பாட்டையடுத்து சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்ற மாவட்ட தேர்தல் கண்காணிப்பு உத்தியோகத்தர்கள் ஆலய நிர்வாகங்களுக்கும், ஏற்பாட்டாளர்களுக்கும் எழுத்தில் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர்.

இதற்கமைய ஆலயச் சூழலில் அமைக்கப்பட்டுள்ள மேடை மற்றும் சுற்றுப் புறத்தில் தேர்தல் தொடர்பான சின்னங்கள் எவையும் காட்சிப்படுத்தக் கூடாது என்பதனை ஆலய நிர்வாகங்கள் உறுதி செய்ய வேண்டும், இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள மேடையில் பிரதமருடன் எந்தவொரு வேட்பாளரும் பிரசன்னமாக முடியாது, இதனைக் கூட்ட ஏற்பாட்டாளர்கள் உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் அலுவலகம் கண்டிப்பாக வலியுறுத்தியுள்ளது.



# மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இன்று வழிபாடுகளில் ஈடுபட்ட பிரதமர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்துக்கு இன்று விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ஹறிணி அமரசூரிய, மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் மகா கும்பாபிசேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற நிலையில் மதியம் பிரதமர் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

பிரதமர் ஆலயத்துக்கு வருகை தர விருந்த நிலையில் அதிகாலை வேளை ஆலயச் சூழலில், பொலிஸ் விசேட அதிரடி படையினர், பொலிஸார் மற்றும் பிரதமர் பாதுகாப்புப் பிரிவினர் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு பலத்தப்படுத்தப்பட்டது.

ஆலயத்துக்கு வருகை தந்த பக்தர்கள் சோதனையிடப்பட்டு கெடுபிடிகளுக்கு முகம் கொடுத்த நிலையில் பலரும் விசனம் தெரிவித்திருந்தனர்.

இதன் பின்னர் சிறிது நேரத்தில் ஆலய தர்மகார்த்த சபையினர் முக்கியஸ்தர்களுடன் பேசியதை அடுத்து, பாதுகாப்புப் கெடுபிடிகள் ஓரளவு தளர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.













நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# உயிர்கொல்லித் தொற்று

2024 ஆம் ஆண்டில் இலங்கையில் 824 புதிய எச்.ஐ.வி. நோயாளிகளைக் கண்டறிந்துள்ளனர் என பால்வினை நோய் நிபுணர் மற்றும் தேசிய பாலியல் நோய், எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் வினோ தர்மகுலசிங்க தெரிவித்திருக்கின்றார்.

இத்துணை எண்ணிக்கையில் புதிய எச்.ஐ.வி. நோயறிதல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளமையால், தேசிய எய்ட்ஸ் குழு அடுத்த இரண்டு மாதங்களுக்குள் கூடி இவ்விடயத்தை ஆராய உள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. கொவிட் தொற்று மற்றும் அதைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட பிற நெருக்கடிகள் காரணமாக மூன்று வருட இடைவெளிக்குப் பிறகு தேசிய எய்ட்ஸ் குழு கூட்டப்படுவது குறிப்பிடத்தக்கது.

15-24 வயதுக்குட்பட்டவர்களிடையே இந்நோய்த் தொற்று புதிதாக அதிகரித்திருக்கின்றமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த வயது இளைஞர்களிடையே 115 புதிய எச்.ஐ.வி. தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டில் மொத்த புதிய தொற்றுகளில் 14 வீதமாகும்.

'எச்.ஐ.வி.' மற்றும் 'எய்ட்ஸ்' இடையே உள்ள வேறுபடுத்தலின் முக்கியத்துவத்தை டாக்டர் தர்மகுலசிங்க வலியுறுத்துகின்றார்.

உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, எச்.ஐ.வி. என்பது உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தைத் தாக்கும் ஒரு வைரஸ். இந்த நோய்த்தொற்றின் மிகவும் மேம்பட்ட கட்டத்தில்தான் எய்ட்ஸ் ஏற்படுகிறது.

சமூக மருத்துவ ஆலோசகரும் தேசிய பாலியல் நோய், எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளருமான டாக்டர் சத்யா ஹேரத், புதிய தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு இரண்டு காரணங்களால் இருக்கலாம் எனத் தெரிவித்தார். ஒன்று - சமூக முறைமைகளில் ஏற்படும் மாற்றங்கள். அடுத்தது - நடத்தை முறைமைகளில் ஏற்படும் மாற்றங்கள்.

அவரது கூற்றுப்படி, நடத்தை முறைமை மாற்றங்க இரண்டு திசைகளில் மாறி விட்டது. பாலியல் நடத்தை மற்றும் ஆரோக்கியத்தை நாடும் நடத்தை ஆகியவையே அவை இரண்டும்.

"டேட்டிங் செயலிகள் மற்றும் ஒன்லைன் தளங்கள் போன்ற சமூக மாற்றங்களால் பாலியல் செயல்பாடு மாறிவிட்டது. இளைஞர்களிடையே ஆணுறை இல்லாத ஆசன வாய் உடலுறவு அதிகரித்து வருகிறது. பாதுகாப்பற்ற பாலியல் நடத்தைகளும் வஸ்துகளின் செல்வாக்கின் கீழ் நிகழ்கின்றன" என்று அவர் கூறினார். ஆயினும் ஆரோக்கியத்தை நாடும் முன்னெச்சரிக்கை உணர்வும் தம்மை பரிசோதித்து கொள்ளும் கவனிப்பும் கூட அதிகரித்துள்ளது என்கின்றார் அவர்.

இலங்கையில் முதல் எச்.ஐ.வி. தொற்று 1987 இல் கண்டறியப்பட்டது. ஆனால் அதன் பின்னர் நாடு குறைந்த அளவிலான எச்.ஐ.வி. தொற்றுநோயைப் பரவல் என்ற நிலைமையைப் பேணி வருகிறது. விழிப்புணர்வைப் பரப்புவதற்காக நெருக்கடி ஆபத்தில் உள்ள மக்கள் குழுக்களுடன் தொடர்பு கொள்ள தேசிய பாலியல் நோய், எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் தொடர்ந்து முயற்சித்து வருகிறது.

அதன் சமீபத்திய முயற்சிகளில், சேவைகளுடன் மக்களை மிகவும் திறமையாக இணைக்கும் எத்தனமாக Know4Sure என்ற மொபைல் செயலியைப் பயன்பாட்டை சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தியத்து. இது மக்களை அருகிலுள்ள மருத்துவமனைகளுடன் இணைப்பது மற்றும் கருத்தடை மற்றும் சுய பரிசோதனை கருவிகளை அவர்களின் வீடுகளுக்கு வழங்குவது போன்ற திட்டங்களை முன்னெடுக்கின்றது.

உயிர் கொல்லித் தொற்றான எச்.ஐ.வி. குறித்து பாமரனையும் முற்கூட்டியே 'அலர்ட்' பண்ணும் விதத்தில் விழிப்புணர்வு நடவடிக்கைகளைப் பரவலாக்க வேண்டும். பாதுகாப்பான உடலுறவு முறைகளை சமூகத்தில் ஒவ்வொரு மட்டத்துக்கும் எட்ட வைக்க வேண்டும். தொற்றுச் சோதனைகளை அதிகரித்து, தடுப்பு முறைகள், மருந்துகளைப் பரவலாக்கி, சிகிச்சை முறைகளைத் தாராளமாக்கி, இலகுபடுத்த வேண்டும். மூன்று வருட இடைவெளிக்குப் பிறகு கூடும் தேசிய எய்ட்ஸ் குழுவின் முன்னால் பாரிய சமூகப் பொறுப்புக் காத்துக் கிடக்கின்றது.


விடா முயற்சி விஸ்வரூப வெற்றி
பிரபல தென்னிந்திய பாடகர்
அந்தனி தாசனுடன்
Sawadeeka
MEGA
MUSICAL NIGHT
அதிரடி இசைக் கொண்டாட்டம்
ஏப்ரல் 12
இரவு 07.00
அனுமதி இலவசம்
வல்வெட்டித்துறை
ரேவடி கடற்கரையில்
ஏற்பாட்டு உதவி
யாழ்ப்பாண கபடி சங்கம்
வாழ்வை விளையாட்டு கழகம்.
Media Sponsors

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## மக்களுக்கு திருப்திகரமான சேவைகளை பெற்றுக்கொடுப்பதே எனது இலக்காகும்!

### இலங்கை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் சுதர்சன் தெரிவிப்பு

(மட்டு.துஷாரா, அபு அலா)

எமது மட்டு. மாநகர அபிவிருத்தி வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டுமாக இருந்தால் உள்ளூராட்சித் தேர்தலில் மாநகர சபையின் அதிகாரங்களை எமது வட்டார மக்கள் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு வழங்க வேண்டும்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாநகர சபையின் 11 ஆம் வட்டார பெரிய உப்போடை, சின்ன உப்போடை, சீலாமுனை வட்டார வேட்பாளர் த.நடராசா சுதர்சன் இவ்வாறு தெரிவித்தார்.

சீலாமுனை பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

கிராமங்களையும், நகரங்களையும் சிறந்த திட்டங்களுடன் அபிவிருத்தி செய்வதுடன், மக்களுக்கு திருப்திகரமான சேவைகளை பெற்றுக்கொடுப்பதே எனதும், எமது கட்சியினதும் இலக்காகும்.



ஊழல், லஞ்சம், வீண்விரயம், அதிகார துஷ்பிரயோகமின்றி தூய்மையானதும், நேர்மையானதுமான அரசியல் பணிகளை மேற்கொள்ளவதையே எமது மக்கள் எதிர்பார்க் கின்றனர். நீங்கள் எதிர்பார்க்கும் அனைத்தையும் நான் செய்வேன் என்பதை மிக ஆணித்தரமாக எமது மக்களுக்கு செல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மட்டக்களப்பு மாநகர சபைப் பகுதியைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை எமக்குள்ளது. எமது மாநகரம் இன்னும் முழுமையாக அபிவிருத்தியடையவில்லை. இதனை முழுமையடையச் செய்வதாக இருந்தால் எமது கட்சியின் கையில் ஆட்சி அதிகாரம் வரவேண்டும் என்பதை நாம் புரிந்து கொண்டு வேறு யாருக்கும் இடமளிக்ககாமல் எமது கட்சியின் சின்னமான வீட்டுச் சின்னத்துக்கு நீங்கள் வாக்களிக்க வேண்டும்.

இந்த முறைத் தேர்தலிலும் எமது மாநகர சபையை இலங்கை தமிழ் அரசு கட்சி கைப்பற்றும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இந்த வெற்றி ஒரு சாதாரண வெற்றியன்றி வரலாறு காணாத வெற்றியாக அமையவேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஓரணியின் கீழ் திரளவேண்டும் என்று உங்களை கேட்டுக் கொள்கிறேன்.- என்றார்.








## அட்டாளைச்சேனையில் தேர்தல் பிரச்சார கூட்டம்

(எம். எப். றிபாஸ்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அட்டளைச்சேனை ஜும்ஆ பள்ளி வட்டாரத்தின் போட்டியிடும் வேட்பாளரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான ஏ.எல்.எம். பாயிஸை ஆதரித்து பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.கஸ்ஸாலி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை, வேட்பாளர் ஏ. எல்.எம். பாயிஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முன்னாள் அட்டாளைச்சேனை பிரதேச அமைப்பாளர் ஏ.கே.அமீர் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.




tamil one TV HD
சித்திரை
கோடைத்திருவிழா
2025
வட மாகாண ஆண், பெண்
அணிகளுக்கான கபடி போட்டிகள்,
சுவாரஸ்யமான சித்திரை விளையாட்டு போட்டிகள்,
மற்றும் அதிரடி இசை நிகழ்ச்சி!
இடம்
வல்வெட்டித்துறை
ரேவடி கடற்கரை
ஏப்ரல் 12
Beach கபடி முதல் சுற்றுப்போட்டிகள்
ஏப்ரல் 12 - இரவு 07:00 மணிக்கு
தென்னிந்திய பாடகர்களுடன்
மாபெரும் இசை நிகழ்சி
ஏப்ரல் 13 - காலை 06:00 - மாலை 06:00
• ஆண், பெண் கபடி இறுதி போட்டிகள்
• பாரம்பரிய மற்றும் சுவாரஸ்யமான சித்திரை விளையாட்டு போட்டிகள்
கோடை திருவிழாவை கொண்டாட
அனைவரையும்
வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரைக்கு
அன்புடன் அழைக்கிறோம்!
ஏற்ப்பாட்டு உதவி
• யாழ்ப்பாண கபடி சங்கம்
• வாழ்வை விளையாட்டு கழகம்.
Media Sponsors
சக்தி
VIRAKESARI வீரகேசரி
tamil one TV
a one
முரசு

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்




# இந்த அரசு மீண்டும் மீண்டும் பொய் கூறி உள்ளூராட்சியிலும் வெற்றி பெறவுள்ளது

***ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நானாட்டான் பிரதேச சபை வேட்பாளர் பாரிஸ்***

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

இந்த நாட்டில் தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒன்று வந்துள்ளது. இந்த அரசு முழுக்க முழுக்கப் பொய் சொல்லி ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் ஆகியவற்றை வெற்றி பெற்றுள்ளது. மீண்டும் பொய் கூறி உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற இருக்கிறது.

எனவே மக்கள் கவனமாகவும், நிதானமாகவும் வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளரும் நானாட்டான் பிரதேச சபையின் வேட்பாளருமான என்.எம்.எம். பாரிஸ் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அனைவரும் மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்த விடயம், ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டால் நாட்டில் பாரிய மாற்றம் ஏற்படும் என்பது. அந்த மாற்றத்தின் ஊடாக மக்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்று அனைவரும் எதிர்பார்த்தனர்.

அதன் அடிப்படையில் இந்த நாட்டு மக்கள் அனைவரும், அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தனர். அந்த வகையில் எங்களுக்கும் தோன்றியது அநுரகுமார திஸாநாயக்க அவர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்று. எனினும் நாங்கள் வேறு கட்சி சேர்ந்தவர்கள் என்பதால் அவருக்கு வாக்களிக்கவில்லை.

ஆனால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுளுக்கு வாக்களித்த மக்கள் அனைவரும் தற்போது தலையில் கையை வைத்து கவலைப்படுகின்றனர். அவருக்கு ஏன் வாக்களித்தோம்? அவர் சொன்னது எதையும் செய்யவில்லை என்று. மக்கள் தற்போது திணறிக் கொண்டு இருக்கிறார்கள்.முன்னாள் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் இருந்த பொருள்களின் விலையைப் பார்க்கத் தற்போது பொருள்களின் விலைகள் பல மடங்கு அதிகரித்துள்ளன.

இந்த சந்தர்ப்பத்தில் தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒன்று வந்துள்ளது. மக்கள் இத் தேர்தலில் தெளிவாக இருக்க வேண்டும்.

இந்த அரசு முழுக்க முழுக்க பொய் சொல்லி ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் ஆகியவற்றை வெற்றி பெற்றுள்ளது.மீண்டும் பொய் கூறி உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வெற்றி பெற இருக்கிறது. எனவே மக்கள் கவனமாகவும்,நிதானமாகவும் வாக்களிக்க வேண்டும்.

எதிர்வருகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக நானாட்டான், மாந்தை மேற்கு மற்றும் முசலி ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களில் வேட்பாளர்களை களம் இறக்கி போட்டி போடுகிறோம்.

சில அரசியல்வாதிகள் 30 வருடங்களாக ஏமாற்றி வருகின்றனர். ஒரு விடயங்களுக்கும் தீர்வை பெற்றுக் கொடுக்க முடியாத அரசியல் வாதிகளே இந்த மாவட்டத்தில் இருக்கிறார்கள். எனவே எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிந்தித்து வாக்களியுங்கள்.– என்றார்.

இதன்போது கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய திலீப் லொக்கு பண்டார வும் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# அரசியலில் நான் உழைக்க வரவில்லை; மக்களுக்கான எனது சேவை தொடரும்!

## சுயேச்சை தலைமை வேட்பாளர் சசிகுமார்

( வி.ரி.சகாதேவராஜா)

அரசியலில் நான் உழைப்பதற்காகவோ, பொய் சொல்லி மக்களை ஏமாற்றுவதற்காகவோ வரவில்லை. என்னிடம் இருக்கும் பணத்தில் பல சேவைகளைச் செய்து வருகின்றேன். அது தொடரும்.

இவ்வாறு திருக்கோவில் பிரதேச சபைத்தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை குழு (வண்டில் சின்னம்) தலைமை வேட்பாளரும் பிரபல சமூக செயற்பாட்டாளரும் தொழிலதிபருமான சுந்தரலிங்கம் சசிகுமார் தெரிவித்தார்.

திருக்கோவில் பிரதேசத்தில் விநாயகபுரம் மற்றும் திருக்கோவில் ஆகிய இடங்களில் நடைபெற்ற தேர்தல் பரப்புரையின் போது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்

அங்கு மேலும் தெரிவிக்கையில்,

திருக்கோவில் பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கு அமையவே இந்தத் தேர்தலில் களம் இறங்கியுள்ளேன். என் அரசியல் வருகையை தாங்கிக் கொள்ள முடியாத சில அரசியல்வாதிகள் எனக்கெதிராக பல பொய்ப் பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். நாம் யாரையும் விமர்சிக்கப் போவதில்லை. எம்மால் மக்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதை முன்வைத்தே வாக்கு கேட்கின்றோம்.

எமது சேவையை பற்றி அறிந்த பிரதேச மக்களே எம்மை களம் இறக்கியுள்ளனர். இம்முறை நடைபெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் திருக்கோவில் பிரதேச சபையை எமது சுயேட்சை குழுவான வண்டில் சின்னம் கைப்பற்றி ஆட்சி அமைக்கும். இங்குள்ள பத்து வட்டாரத்திலும் எமது சுயேட்சை குழு அமோக வெற்றி பெறும்.

எமது பிரதேச மக்கள் மாற்றம் ஒன்றை வேண்டி நிற்கின்றனர். அதனாலே மக்கள் வண்டில் சின்னத்துக்குப் பின்னால் ஓரணியில் திரண்டுள்ளனர். இதனைக்கண்டு பாரம்பரிய அரசியல் கட்சிகளுக்கு பயம்பிடித்து விட்டது. இன்று மாற்றத்தை வேண்டி நிற்கும் மக்களின் தெரிவாக வண்டில் சின்னம் திகழ்கிறது. திருக்கோவில் பிரதேச சபையை லஞ்சம் ஊழலற்ற சபையாக கட்டியெழுப்புவோம். திருக்கோவில் பிரதேசத்தை அபிவிருத்தி அடைந்த பிரதேசமாக கட்டியெழுப்புவதே எனது நோக்கமாகும்.

கடந்த காலங்களில் இந்தப் பிரதேசத்தில் இருந்து எந்தவொரு உற்பத்திப் பொருள்களும் ஏற்றுமதி செய்யப்படவில்லை. நாம் இப் பிரதேசத்தில் ஏற்றுமதி பொருட்களை உற்பத்தி செய்து பல தொழில் முயற்சியாளர்களை உருவாக்கவுள்ளோம்.

திருக்கோவில் பிரதேசம் நீர்வளம், நிலவளம், வயல்வளம், மலைவளம், இயற்கை வளம் கொண்டதாகும். இங்கிருந்து மீன், இறால் வளர்ப்பில் ஈடுபட்டு அதனை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தீர்மானித்துள்ளோம். இதேபோல் இங்கு நில வளம் உள்ளது. இந்த நில வளத்தை உச்ச அளவில் பயன்படுத்தி பப்பாசி, முருங்கை செய்கையை ஊக்குவிக்கவுள்ளோம். உற்பத்தி செய்யப்படும் இவைகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் ஏற்றுமதி வருமானத்தை பெறுவதே எனது நோக்கமாகும்.

அத்துடன் எமது பிரதேசத்தில் மூடப்பட்டுள்ள ஆடைத் தொழில்சாலைகளை மீள திறந்து இங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதற்கும் நான் ஆயுத்தமாக இருக்கிறேன். அதுமட்டுமின்றி பிரதேசத்தின் மலை வளத்தை பயன்படுத்தி எமது பிரதேச கடலரிப்பை தடுப்பதற்கு முழு மூச்சாக பாடுபடுவேன். மேலும் இளைஞர், யுவதிகள், மாணவர்கள் விளையாட்டு திறனை மேம்படுத்தும் வகையில் குறிப்பாக நீச்சல் பயிற்சியை மேற்கொள்ளும் வகையில் நீச்சல் தடாகம் அமைக்கப்படும். சிறந்த பயிற்சியாளர்கள் மூலம் பயிற்சி வழங்கப்படும்.

திருக்கோவில் பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமங்கள் உல்லாச பயணிகளை கவரக் கூடிய அழகிய பிரதேசமாகும். இங்கு இயற்கையான சிறு சிறு தீவுகளும் உள்ளன. இவற்றை மேம்படுத்தி வெளிநாட்டு சுற்றுலா பயணத்துறையை கட்டியெழுப்புவ தற்கும், வெளி நாட்டு வருவாயை மீட்டெடுப்பதற்கும் காத்திருக்கின்றேன். – என்றார்.



# வலுவிழந்தோருக்கான வீடமைப்பு காசோலை வழங்கி வைக்கும் நிகழ்வு

(எம். எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலக சமூக சேவை திணைக்களத்தால் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளரின் வழிகாட்டலின் கீழ் பிரதேச செயலகத்தில் வைத்து தேசிய செயலத்தால் வலுவிழந்தோருக்கான வீடமைப்புக்கு உரிய காசேலைகள் வழங்கி வைக்கப்பட்டன.உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஷாபிர் இவற்றை வழங்கினார்.

இவர்களுக்கு மூன்று கட்டமாக 15 லட்சம் ரூபா வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் கெ.எம். எம்.அன்சார், சமூகசேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.எம். மொஹிடீன் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எஸ்.ஐ. ஆஷிக் அகியோரும் கலந்து கொண்டனர்.











# சுற்றுலா பயணிகளது நலன் கருதி குஞ்சுக்குளம் அருவியாறு திறப்பு!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குஞ்சுக்குளம் கிராமத்தில் அருவி ஆற்றுப் பகுதியில் அமைக்கப்பட்ட 'அருவி ஆறு சுற்றுலா வலயம்' செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் வடமாகாண சுற்றுலாத்துறை தலைவர் பத்திநாதன் மற்றும் வடமாகாண சுற்றுலாத்துறை திணைக்கள உத்தியோகத்தர்கள், நானாட்டான் பிரதேச சபை செயலாளர் மற்றும் அரச திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். இதன்போது அருவியாறு சுற்றுலா வலய பெயர்ப் பலகை திரைநீக்கம் செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து தொங்கு பாலமும் திறந்து வைக்கப் பட்டது.

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குஞ்சுக்குளம் பகுதிக்கு வடக்கு மற்றும் நாட்டின் பல பாகங்களில் இருந்தும், புலம்பெயர் நாடுகளில் இருந்தும் நாளாந்தம் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வது வழமை. இதனைக் கருத்தில் கொண்டு அருவியாறு திறந்து வைக்கப்பட்டுள்ளது.





# மெல்பேர்ணில் 'வாத்தியார்' சிறுகதை நூல் அறிமுக விழா

(ஐங்கரன் விக்கினேஸ்வரா)

மெல்பேர்ணில் கந்தையா நாகேந்திரத்தின் சிறுகதைத் தொகுப்பான 'வாத்தியார்' எனும் நூல் அறிமுக விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு மெல்பேர்ண், மவுண்ட் வேவெளி சமூக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை ஈ கல்வி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் செ. வாசுதன் வழங்குவார்.

நிகழ்வின் தலைமை உரையை இணை பேராசிரியர் கலாநிதி ஸ்ரீ கௌரிசங்கர் வழங்குவார்.


வாத்தியார் சிறுகதை நூல் அறிமுக உரையை வி. இளங்கோவும், புத்தக மதிப்பாய்வு உரையைச் சண்முகம் சந்திரனும் ஆற்றுவர்.

ஏற்புரையை ஆசிரியர் கந்தையா நாகேந்திரமும் நன்றி உரையை ஈ கல்வி நிறுவனச் செயலர் வே. இரவீந்திரனும் வழங்குவர்.

கணித ஆசிரியரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பௌதீக விஞ்ஞான பட்டதாரியான கந்தையா நாகேந்திரம் தனது ஆசிரியர் பட்டப்பின் படிப்பை நியூசிலாந்தில் பெற்றுக்கொண்டார். ஆரம்ப காலங்களில் இலங்கை, சாம்பியா ஆகிய நாடுகளில் ஆசிரியராக பணிபுரிந்தவர்.

கற்பித்தலின் மீது இருந்த ஈர்ப்பால் இருபது வருடங்களுக்கு மேலாக ஆஸ்திரேலியாவில் உயர் பாடசாலை ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார். கருத்துக்களையும் சிந்தனைகளையும் எழுத்தாக்கி, சமுதாயத்தில் விதைக்கும் ஆசிரியர், தனது பெயரில்

தொடர்ச்சி▼



## மெல்பேர்ணில்...

தொடர்ச்சி▲

மட்டுமல்லாமல் செயலிலும் கேந்திர மையத்தன்மை கொண்டவர்.

தனது சொற்பிரயோகங்களை நகைச்சுவையுடனும், அன்புடனும், தேவையாயின் ஆயுதமாகவும் கையாள்பவரின் எழுத்துகளில் இத்தகைய தன்மைகள் வெளிப்படுகிறது.

இந்நூலின் ஆசிரியர் தனது கதைகளில் வாழ்வியல் தத்துவங்களை வலியுறுத்தி, தான் கூறவந்த கருத்துக்களை வாசகர்களின் மனதில் அழிக்க முடியாத வகையில் துல்லியமாக வடித்துள்ளார்.

மனித உறவுகள், வர்க்கம், சாதி தொடர்பான சமூக பிரச்சனைகளை முன்வைத்து, எளிய உரைநடையில் சமுதாயத்தின் பல்வேறு அடுக்குகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பாத்திரங்களின் மூலம் தனது சிறுகதைகளைப் படைத்துள்ளார்.








# கல்முனை போக்குவரத்துச் சாலையின் புனரமைப்புத் தொடர்பில் கலந்துரையாடல்

(பாறுக் ஷிஹான்)

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்காவின் பணிப்பின் பேரில் போக்குவரத்து அமைச்சின் மேலதிக செயலாளர் வி.ஜெகதீசன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா இணைந்து கல்முனை போக்குவரத்து சாலையின் புனரமைப்பு சம்பந்தமாகப்பார்வையிட்டனர்.

கல்முனை பஸ் நிலையத்தையும் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் மூலம் சீர் செய்வது பற்றியும் பொலிஸ் பாதுகாப்பு வழங்குவது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.








# நுவரெலியா காயத்ரி பீடத்தில் உள்ள சிவ ஆலய கும்பாபிஷேகம் நேற்று!

**(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)**

நுவரெலியா காயத்ரி பீடத்தில் அமைக்கப்பட்டுள்ள 108 பாண லிங்கங்களுக்கான சிவ ஆலயத்தின் மாபெரும் கும்பாபிஷேகம் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

கும்பாபிஷேக நிகழ்வுகள் அறங் காவலர் சபை நிர்வாகி சக்திவேல் சந்திர மோகன் தலைமையில் நடைபெற்றது.

பூஜை நிகழ்வுகள் பிரதிஸ்டா பிரதம குரு குருதாச மணி சிவஸ்ரீ இரா. சண்முக சுந்தர குருக்கள் தலைமையில் நடைபெற்றன. ஆலய பிரதம குரு பரத் வாஜ தத்புருஷ சிவாச்சாரியார் சிவாகம கிரியா ஜோதி யோகராஜ கோமகன் குருக்கள் தலைமையில் யாகசாலையில் கணபதி வழிபாட்டுடன் கணபதி ஹோமம் புன்யாவாஜனம் நடை



பெற்றன.

அதனைத் தொடர்ந்து சித்தர் முருகேஷ் மகரிஷிக்கு விசேட அலங்கார அபிஷேக பூஜைகள் நடைபெற்றது. காயத்ரி பீடத்தில் உள்ள சிவலிங்க பெருமானுக்கு அலங்கார தீர்த்த அபி ஷேக தீப ஆராதனைகள் செய்யப்பட்டன. தொடர்ந்து பிரதான யாகசாலையில் கணபதி ஹோமம், புண்ணியாவாஜனம், பூர்ணாகுதி நடைபெற்று விமான கலசங்களுக்கான கும்ப நீர் அபிஷேக ஆராதனைகள் பக்தர்கள் புடை சூழ ஓம் நமச்சிவாய கோஷத்துடன் பக்தி மயமாக நடைபெற்றது.

தொடர்ந்து 108 பாணலிங்கங் களுக்கான பிரதான கும்பம் பக்திப் பர வசத்துடன் பக்தர்களின் ஓம் நமச்சிவாய அரோகரா கோசங்களுடன் ஆலயத்தின் உள்வீதி வலம் வந்து இவ்வாலயத்தில் பிரதான லிங்கமாக பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கும் எம்பெருமான் சிவலிங்கேஸ்வரனுக்கு சுப வேளையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து இவ் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் 108 லிங்கங் களுக்கும் கும்ப நீர் அபிஷேகம் நடை பெற்று தீப ஆராதனைகள் நடை பெற் றது.



# ஆளணியின்றி அல்லல்படும் காரைதீவு பிரதம தபாலகம் !

(வி.ரி. சகாதேவராஜா)

போதிய ஆளணியின்றி காரைதீவு பிரதம தபாலகம் தனது சேவைகளை செவ்வனே நிறைவேற்ற முடியாமல் திண்டாடுகின்றது.

அங்குள்ள மூன்று கருமபீடங்களில் ஒன்றிலேயே சேலை வழங்குநர் இருக்கிறார். ஏனைய இரண்டு கருமபீடங்களும் எந்த நேரமும் வெறிச்சோடி காணப்படுகிறது.

இதனால் அங்கு பலவித தேவைகள் நிமித்தம் செல்லும் பயனாளிகள் பல மணி நேரம் தாமதித்து தமது சேவையை பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாத காலமாக இந்த அவல நிலை அங்கு நிலவுகிறது.



களவாஞ்சிகுடியைச் சேர்ந்த ஒரு பெண் தபாலதிபர் கடமையில் உள்ளார். ஏனைய தர உத்தியோகத்தர்கள் கருமபீட கடமைக்கு இல்லை.

ஒரு சாதாரண ஊழியர் ஒருவர் சிலவேளை தாமாகவே முன்வந்து சேவை நிமித்தம் வந்து கடமையாற்றுவதை காணக் கூடியதாக இருக்கின்றது.

மொத்தத்தில் காரைதீவு மக்கள் தபாலக சேவையை பெறுவதில் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக கிழக்கு மாகாண தபால் அத்தியட்சகர் கவனம் எடுக்க வேண்டும் என்று காரைதீவு பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றார்கள்.



# இன்று முதல் பாடசாலைகளுக்கு மீண்டும் விடுமுறை!

( வி.ரி.சகாதேவராஜா)

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளின் முதலாம் தவணையின் 2 ஆம் கட்ட கல்வி நடவடிக்கைகள் இன்று வெள்ளிக்கிழமை (11) முடிவடையவுள்ளன என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி சித்திரைத் புத்தாண்டு விடுமுறை 09 நாள்கள் ஆகும். அதிலும் லீவு நாள்கள் ஏழு நாட்கள். ஆக இரண்டு நாள்கள்தான் விடுமுறையாகக் கணிக்கப்படும்.

அதன்படி, முதலாம் தவணைக்கான மூன்றாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் மீண்டும் ஏப்ரல் 21 ஆம் திகதி ஆரம்பமாகி மே 9 ஆம் திகதி வரை நடைபெறும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.





# கல்முனை பஸ்தரிப்பு நிலையத்தை புனரமைப்புச் செய்யுமாறு கோரிக்கை

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மத்திய பஸ்தரிப்பு நிலையத்தை புனரமைப்புச் செய்யுமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் முக்கிய வர்த்தக கேந்திர நிலையமாகக் காணப்படுகின்ற கல்முனை மாநகரத்தில் அமைந்துள்ள இந்த பஸ் தரிப்பு நிலையம் நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் கவனிப்பார் அற்ற நிலையில் காணப்படுகிறது.

பயணிகளும் வாகன சாரதிகளும் பல்வேறு அசௌகரீகங்களை இதனால் எதிர்நோக்கி வருகின்றனர். பஸ் தரிப்பு நிலையக் கட்டடத்தில் மழை காலங்களில் பல்வேறு அசௌகரீகங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

பஸ் தரிப்பு நிலையக் கட்டடமும் மோசமான நிலையில் காணப்படுவதோடு, அப்பிரதேசங்களில் துர்நாற்றம் வீசுவதாகவும், பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கல்முனை பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து கொழும்பு, யாழ்ப்பாணம், புத்தளம், மன்னார், குருநாகல், கட்டுநாயக்க விமான நிலையம் ஆகிய இடங்களுக்கு நாளாந்தம் பஸ் சேவைகள் இடம்பெறுகின்றன.

நீண்ட தூரம் பிரயாணம் செய்ய வரும் பயணிகள் தங்குவதற்கும் குறிப்பாக அமர்ந்து கொள்வதற்கான வசதிகளும் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இந்த பஸ் தரிப்பு நிலையத்தை சகல வசதிகளுடன் கூடிய பஸ் தரிப்பு நிலையமாக புனரமைத்துத் தருமாறு பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பஸ் நிலையத்தின் மேல் கட்டடத்தில் பல்வேறு துர் நடத்தைகளுக்கான அடையாளங்கள் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கல்முனை பிராந்திய சுகாதார பணிமனை கல்முனை தலைமையக பொலிஸ் நிலையம் கல்முனை மாநகர சபை ஆகியவற்றுக்கு அருகாமையில் உள்ள இந்த பஸ் நிலையத்தில் இவ்வாறு நிலைமை காணப்படுவது துரதிர்ஷ்டமாகும். அதுமாத்திரமன்றி உரிய பாதுகாப்பு வசதிகள் இன்மையால் இவ்வாறான பிரச்சினைகள் இங்கு ஏற்படுகின்றன. இது தவிர இக்கட்டட கூரைகள் பயணிகள் மீது இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றன மக்கள் குறிப்பிட்டனர்.

பஸ் நிலையத்தின் மேல் கட்டடத்தில் நீண்ட காலமாகப் புறாக்கள் காணப்படுவால் ஒரு சரணாலயமாக காணப்படுகிறது என்றும் அதன் எச்சங்கள் நிறைந்து இக்கட்டடத்தில் துர்நாற்றம் வீசுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிவனொளிபாத மலை பருவகாலம் விசாகத்துடன் நிறைவுக்கு வருகிறது

(மஸ்கெலியா)

வைகாசி விசாகம் பௌர்ணமி தினத்தில் நிறைவுக்கு வருகிறது சிவனொளிபாத மலை பருவகாலம்.

அதற்கான குழு கூட்டம் சிவனொளி பாத மலைக்கு பொறுப்பான பௌத்த மத தேரர் ஊவா வெரலஸ்ச பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பெங்கமுவே தம்மதின்ன தலைமையில் நல்லதண்ணி கிராம உத்தியோகத்தர் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் மஸ்கெலியா பிரதேச சபையின் செயலாளர் மற்றும் அம்பகமுவ மற்றும் நோர்வூட் பிரதேச செயலாளர்கள், இந்தப் பகுதியில் உள்ள அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள், பொது சுகாதார அதிகாரிகள், மின்சார சபையினர் தேசிய நீர் வடிகால் திணைக்கள அதிகாரிகள், அரச பஸ், தனியார் பஸ், ஹட்டன் ரயில் நிலைய அதிகாரிகள், லக்சபான இராணுவ முகாம் அதிகாரி , நல்லதண்ணி நகர வர்த்தகர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வைகாசி விசாக பௌர்ணமி நாளில் முடிவுக்கு வரும் பருவ காலம், அன்றைய நாளில் சுவாமிகள் இரத்தினபுரி பலாபத்பள வழியாகவும் நல்லதண்ணி நோட்டன் பிரிட்ஜ் வழியாகவும் பொகவந்தலாவ வழியாக கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டு ஏ்ளமை தொடர்பில் பேசப்பட்டது.

சுவாமி மற்றும் பூஜை பொருள்கள் அனைத்தும் லக்சபான இராணுவத்தினரால் மலை உச்சியில் இருந்து மிகவும் பாதுகாப்பான முறையில் பல்லக்கில் வைத்து நல்லதண்ணி நகருக்கு கொண்டு வரப்பட்டு மிகவும் பாதுகாப்பான முறையில் வாகனங்கள் மூலம் இரத்தினபுரி கல்பொத்தாவில ரஜ மஹா விகாரைக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# எழுத்தாயுதத்தை ஏந்திய ஊடகர் பொ.மாணிக்கவாசகம்

## நாளை (12) அவரது இரண்டாம் ஆண்டு நினைவு

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

(ஈழத்து ஊடகத்துறையில் உயிரையும் பணயம் வைத்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாக போரின் மையப் புள்ளியிலிருந்து துணிச்சலுடன் பணிபுரிந்த பொ. மாணிக்கவாசகத்தின் இரண்டாவது ஆண்டு நினைவு தினம் நாளை.)

ஈழத்தின் போர்க் கால நாள்களில் இரவு 9.15மணிக்கு ஒலிபரப்பாகும் பிபிசியின் தமிழோசை கேட்காமல் குறிப்பாக இலங்கை செய்திகளில் வடமாகாண செய்தியாளர் மாணிக்கவாசகத்தின் செய்திகளையும் பெட்டகங்களையும் கேட்காமல் பலரும் உறங்கமாட்டார்கள்.

போர்க் காலத்தில் வானொலிப் பெட்டிகளுக்கு முன்பாக, 'இது லண்டன் பிபிசியின் உலக சேவையில் இருந்து முழங்கும் தமிழோசை' என்ற ஆனந்தியின் அறிவித்தலுடன் 'வடபுலத்திலிருந்து மாணிக்கவாசகம்' என்ற அறிவிப்புக்காய் தமிழ் மக்கள் தவமிருந்த காலங்களை மறக்க முடியாது.

**இடர்மிகு காலத்தின் குரல்**

நெருக்கடியான காலகட்டங்களில் தமிழ்ப் பிர தேசங்களில் இடம்பெற்ற யுத்த மோதல்கள் குறித்து தமது உயிரையும் பொருட்படுத்தாமல் செய்தி சேகரித்து சர்வதேசம் எங்கும் மக்கள் எதிர்கொண்ட துன்பங்களை வெளிப்படுத்திவந்த, ஊடகத்துறையில் உயிரையும் பணயம் வைத்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாக போரின் மையப் புள்ளியிலிருந்து துணிச்சலுடன் பணிபுரிந்த பொன்னையா மாணிக்கவாசகம் மறைந்து இரண்டாம் ஆண்டு நிறைவு.

யுத்த காலத்தில் எழுத்தாயுதத்தை துணிவுடன் பயன்படுத்தியவரும், பத்திரிகைத் தர்மத்தைத் தன் தாரக மந்திரமாகக் கொண்டவரும் சிறந்த ஊடக வியலாளராகச் சேவையாற்றியவருமான பொ.மாணிக் கவாசகம் வாழ்நாள் சாதனையாளராக என்றும் விளங்குகிறார்.


போர்க் காலத்தில் வவுனியாவில் இருந்து பொ. மாணிக்கவாசகம் தரும் உடனடித் தகவல் என்ன என்பதை காதுகொடுத்துக் கேட்க காத்திருந்த உலகத் தமிழ் மக்கள் அவரை என்றும் மறக்கமாட்டார்கள்.

வவுனியாவில் இருந்து பொ.மாணிக்கவாசகம் தரும் உடனடித் தகவல்கள் அக்காலகட்டத்தில் அவரது செய்திகளை மாத்திரமே நம்பக் கூடியதாக இருந்தது. பொ மாணிக்கவாசகம் அவர்கள் பத்திரிகையாளராக ஆற்றியசேவையும், அதிலும் விசேடமாக யுத்த காலத்தில் பலமுனை நெருக்கடிகளுக்கு மத்தியில் நடுநிலை தவறாது ஆற்றிய பணிமறக்க முடியாதவை. கல்வி, சுகாதாரம், அரசியல் களங்களில் உண்மை நேர்மை

தொடர்ச்சி▼









# எழுத்தாயுதத்தை ஏந்திய ஊடகர் பொ.மாணிக்கவாசகம்

தொடர்ச்சி▲

துலங்கும் வகை செய்திகள் தந்த மாண்பு மகத்தானவை.

**வாழ்நாள் சாதனையாளர் விருது**

13.12.2023 இல் கொழும்பில் நடைபெற்ற இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த விருது விழாவில் மூத்த ஊடகவியலாளர் பொ.மாணிக்கவாசகம் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

வீரகேசரியிலும், பி.பி.சியிலும் நீண்டகாலம் ஆபத்தான ஒரு யுத்தப் பகுதியிலிருந்து செய்தி சேகரிப்புப் பணியை துணிச்சலுடன் – திறம்படச் செய்துவந்தவர். அதனைவிட வேறு சில சர்வதேச ஊடகங்களிலும் அவர் பணியாற்றியிருக்கின்றார்.

அத்துடன் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற பொன்னையா மாணிக்கவாசகம் "கால அதிர்வுகள்", "வாழத்துடிக்கும் வன்னி", "மாற்றத்தை நாடும் மாற்றுத் திறனாளிகள்" என்னும் நூல்களையும் எழுதியுள்ளார்.

மறைந்த வாழ்நாள் சாதனையாளர் பொன்னையா மாணிக்கவாசகம் தான் கடந்துவந்த கரடு முரடான பத்திரிகைத்துறை அனுபவங்களையும் தொகுத்து அடுத்த நூலையும் விரைவில் வெளியிட உத்தேசித் திருந்தார்.

இந்த நூல்களில் அடங்கியுள்ள விடயங்கள் யாவும் வீரகேசரி நாளிதழில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்புகள் என்பது வீரகேசரிக்கும் பெருமை தரக்கூடிய விடயமாகும்.

**தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர்**

தமிழ் ஊடகவியலாளர்கள் கடுமையான ஆபத்துக் களை எதிர்கொண்டிருந்த ஒரு காலப் பகுதியில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் பணியாற்றிய அவர்,அந்தப் பதவியின் மூலமாகச் செய்த பணிகளும் முக்கியமானவை.

ஒரு முழு நேர ஊடகவியலாளராக – சுயாதீனமாகப் பணியாற்றிய அவர், தனது அனுபவங்களின் அடிப்ப டையில் சில நூல்களையும் எழுதியிருக்கின்றர். அவை தமிழ் மக்களைப் பொறுத்தவரை வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்தவை.

பொ. மாணிக்கவாசகம் பத்திரிகயாளராக ஆற்றிய சேவை. அதிலும் விசேடமாக யுத்த காலத்தில் பலமுனை நெருக்கடிகளுக்கு மத்தியில் நடுநிலை தவறாதுஆற்றிய பணிமறக்க முடியாதவை.

**'வென்மேரி' விருது கௌரவம்**

யாழ்ப்பாணத்தில் 18.08.2022இல் நடைபெற்ற 'வென்மேரி விருதுகள்" விழாவில் மூத்த ஊடகவியலாளர் பொ.மாணிக்கவாசகம் ஊடகத்துறைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

"வென்மேரி அறக்கட்டளை"யின் முதலாவது விருதுவிழாவான நிகழ்வு யாழ். நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

தமிழின் ஆற்றல்மிகு ஆளுமைகளை அங்கீகரித்து கௌரவிக்கும் விழா என்ற மகுடத்துடன் நடைபெற்ற இந்த விழாவில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண் டிருந்தார்கள். மூத்த ஆளுமைகள், வாழ்நாள் சாதனையாளர்கள், இளம் முயற்சியாளர்கள் என பலதரப்பட்ட ஆளுமைகள் இங்கு கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் ஊடகத்துறையில் உயிரையும் பணயம் வைத்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாக போரின் மையப் புள்ளியிலிருந்து துணிச்சலுடன் பணிபுரிந்த மாணிக்கவாசகம் கௌரவிக்கப்பட்டமை முக்கியமானதாகும்.



# தி.மு.கவின் துணைப் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார் பொன்முடி

தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் பொறுப்பில் இருந்து பொன்முடி விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவர் திருக்கோயிலூர் எம்.எல். ஏவாக உள்ளார். அவர் மீது அண்மையில் சொத்துக் குவிப்பு வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதால் அவரது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார். உச்ச நீதிமன்றம் தண்டனையை நிறுத்தி வைத்த பின்னர் அவருக்கு மீண்டும் வனத்துறை அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

இந்நிலையில் அண்மையில் அவர் பெண்களுக்கு எதிராகப் பேசிய பேச்சும், சைவம், வைணவம் பற்றி சர்ச்சைக்குரிய விதத்தில் பேசியதும் அடங்கிய வீடியோ வைரலாகி சர்ச்சையானதால் அவரது கட்சிப் பதவி



தற்போது பறிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இது தொடர்பாக தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கழக துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி அவர் வகித்து வரும் துணைப் பொதுச்செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறார்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பதவி நீக்கத்துக்கான காரணத்தை அந்த அறிக்கையில் குறிப்பிடவில்லை.

முன்னதாக தி.மு.கவின் எம்.பி. கனிமொழி இன்று வெள்ளிக்கிழமை காலை தனது எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்த பதிவில்,

"அமைச்சர் பொன்முடியின் சமீபத்திய பேச்சு ஏற்றுக்கொள்ள முடியாதது. எந்த காரணத்திற்காகப் பேசப்பட்டிருந்தாலும் இப்படிப்பட்ட கொச்சையான பேச்சுகள் கண்டிக்கத்தக்கது" என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் பொறுப்பிலிருந்து பொன்முடி விடுவிக்கப்பட்டுள்ளார். இது பொன்முடியின் அரசியல் வாழ்க்கையில் மிகப் பெரிய சறுக்கலாகப் பார்க்கப்படுகிறது.



# அயல் நாடுகளின் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன: ராஜ்நாத் சிங் எச்சரிக்கின்றார்

"தொழில்நுட்ப வளர்ச்சி, வெளிநாடுகளின் செயல்பாடுகள் போன்றவற்றால் பாதுகாப்பு சூழல் வேகமாக மாறி வருகிறது. இதைக் கருத்திக் கொண்டு, தக்க வியூகங்கள் வகுத்து முப்படை அதிகாரிகள் செயல்பட வேண்டும்."

- இவ்வாறு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

நீலகிரி மாவட்டம் வெலிங்டன் முப்படை அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், 45 வார பயிற்சியை நிறைவு செய்த 478 அதிகாரிகளுக்கு பட்டங்கள் வழங்கி பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மேலும் உரையாற்றுகையில்,

"நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மியான்மர் மக்களுக்கு இந்திய இராணுவம் சரியான நேரத்தில் நிவாரணம் வழங்கியது பெருமைக்குரியது. இங்கு பயிற்சியை வெற்றிகரமாக முடித்துள்ள இராணுவ வீரர்களுக்குப் பாராட்டுகள். தொழில்நுட்ப வளர்ச்சி, வெளிநாடுகளின் செயல்பாடுகளால் பாதுகாப்பு சூழல் வேகமாக மாறி வருகிறது. பல்வேறு சவால்களை எதிர்கொண்டு, தேசிய பாதுகாப்பை உறுதி செய்யும் கடினமான பணியை இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர். மக்களுக்கு வளமான எதிர்காலத்தை உருவாக்கும் பெரிய பொறுப்பு இராணுவத்தினருக்கு உள்ளது. புதிய தொழில்நுட்பங்களை இராணுவத்தினர் அறிந்துகொள்வது அவசியம்.

உலகமயமாக்கல், தீவிர தேசியவாதம், வளங்கள் பற்றாக்குறை, மனித இடப்பெயர்வு, உணவுப் பாதுகாப்பு, காலநிலை மாற்றம், பேரிடர் அச்சுறுத்தல் என பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சி, புவி அரசியல் ஆகியவை தேசப் பாதுகாப்பில் முக்கியப் பங்காற்றுகின்றன.

செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸ், ட்ரோன், விண்வெளி மற்றும் சைபர் தொழில்நுட்பங்கள் போன்றவை பாதுகாப்புத் துறையில் புரட்சியை ஏற்படுத்தி வருகின்றன. போர்களும் நவீன வடிவங்களைப் பெற்றுள்ளன. உக்ரைன் - ரஷ்யா மோதலில் ட்ரோன்கள் பங்கு அதிகம். உளவு, கண்காணிப்பு, தகவல் தொடர்பு முறைகள் மாறி வருகின்றன. ஆளில்லா உபகரணங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவை போரின் தன்மையைப் பாதிக்கின்றன.

எனவே, பாதுகாப்புப் படைகள் கூட்டாகச் செயல்பட வேண்டியது அவசியமாகிறது. சைபர் தாக்குதல்கள், தவறானப் பிரச்சாரங்கள் மற்றும் பொருளாதாரப் போர் ஆகியவை ஒரு துப்பாக்கிச் சூடுகூட இல்லாமல் அரசியல் - இராணுவ இலக்குகளை அடையக் கூடிய கருவிகளாக மாறிவிட்டன. இந்தியாவும், உலகமும் பல்வேறு வகையான பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்கின்றன.

வடக்கு மற்றும் மேற்கு எல்லைகளில் தொடர்ந்து அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறோம். அண்டை நாடுகளின் மறைமுகப் போர் மற்றும் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன. எனவே, இராஜதந்திர நடவடிக்கைகள், தகவல் பரிமாற்றம், இராணுவ, பொருளாதார மற்றும் தொழில்நுட்பக் களங்களின் ஒருங்கிணைப்பை உறுதி செய்வது முக்கியமாகும்." என்றார்.



# சீன பொருள்கள் மீதான வரியை 145 வீதமாக உயர்த்தினார் ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சீனப் பொருள்கள் மீதான வரிகளை கடுமையாக உயர்த்தியதால், பெரும்பாலான பொருள்கள் மீதான வொஷிங்டனின் மேலதிக வரி 145 சதவீதமாக உயர்ந்துள்ளதாக வெள்ளை மாளிகை உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த புதன்கிழமை பல நாடுகள் மீதான புதிய வரிகளை 90 நாள்களுக்கு ட்ரம்ப் இடைநிறுத்தியிருந்தாலும், சீன இறக்குமதிகள் மீதான புதிய வரிகளை 125 வீதமாக உயர்த்தியதன் மூலமாக பீஜிங்கின் மீது அழுத்தத்தை தீவிரப்படுத்தியுள்ளார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 20 வீத வரியை அடிப்படையாகக் கொண்டு இந்த எண்ணிக்கை உருவாக்கப்பட்டுள்ளது.


கடந்த புதன்கிழமை சீனப் பொருள்களுக்கு 125 சதவீத வரி விதிப்பதாக ட்ரம்ப் அறிவித்தார், ஆனால் பின்னர் வெள்ளை மாளிகை இது முந்தைய 20 சதவீத வரியுடன் கூடுதலாகும் என்று தெளிவுபடுத்தியது.

இதற்கு பதிலடியாக, சீனா நேற்று வியாழக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் அமெரிக்க பொருள்களுக்கு 84 வீத வரிகளை விதித்துள்ளது.

இதற்கிடையில், வொஷிங்டனை வரிக் கொள்கையில் இருந்து பின் வாங்க கட்டாயப்படுத்தும் ஒரு கூட்டணியை உருவாக்குவதற்காகவும், பதிலடி கொடுக்கவும் சீனா சர்வதேச நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

அமெரிக்க வர்த்தகத் துறையின் கூற்றுப்படி, சீனா 2024 ஆம் ஆண்டில் அமெரிக்காவிற்கு 463 பில்லியன் டொலர் பெறுமியான பொருள்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்து.

அதேநேரம் சீனாவிற்கான அமெரிக்க ஏற்றுமதி கடந்த ஆண்டு சாதனை அளவாக 199 பில்லியன் டொலர்களையும் எட்டியுள்ளது.




# நியூயோர்க்கின் ஹட்சன் ஆற்றில் ஹெலிக்கொப்டர் வீழ்ந்து விபத்து

நியூயோர்க்கில் உள்ள ஹட்சன் ஆற்றில் சுற்றுலாப் பயணிகளின் குடும்பத்தை ஏற்றிச் சென்ற ஹெலிக்கொப்டர் ஒன்று வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூன்று குழந்தைகள் உட்பட ஆறு பேர் உயிரிழந்துள்ளனர் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஹெலிக்கொப்டரில் பயணித்த ஐந்து பேர் கொண்ட குடும்பம் ஸ்பெயினைச் சேர்ந்தது என்றும் ஆறாவது நபர் விமானி என்றும் நியூயோர்க் நகர மேயர் எரிக் ஆடம்ஸ் தெரிவித்துள்ளார். இந்த விபத்து உள்ளூர் நேரப்படி நேற்று பிற்பகல் 3.17 மணிக்கு நிகழ்ந்துள்ளது.

விமான விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 11/04/2025

## டொரொன்டோவில் தீ விபத்து; ஒருவர் பலி, இருவர் படுகாயம்

டொரொன்டோவின் லிட்டில் இத்தாலியில் உள்ள ஒரு கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் இருவர் காயங்களுடன் மருத்துவமனையில் 03



# அமெரிக்காவிலிருந்து கனடாவுக்குள் நுழைந்தால் திருப்பி அனுப்புவோம்

## கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவிப்பு

**அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், புலம்பெயர்தல் தொடர்பில் மேற்கொண்டுவரும் கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக, அமெரிக்காவிலிருந்து கனடாவுக்குள் நுழையும் புகலிடக்கோரிக்கையாளர்கள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.**

**ட்ரம்ப் புலம்பெயர்தல் தொடர்பில் மேற்கொண்டுவரும் கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக, அமெரிக்காவிலிருந்து கனடாவுக்குள் நுழையும் புகலிடக்கோரிக்கையாளர்கள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.**

அத்துடன், அந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் அச்சம் உருவாகியுள்ளது.

இந்நிலையில்,புகலிடக்கோரிக்கையாளர்கள் அமெரிக்காவிலிருந்து கனடாவுக்குள் நுழைந்தால் அவர்களை அமெரிக்காவுக்கே திருப்பி அனுப்பிவிடுவோம் என்று கனடா பிரதமரான மார்க் கார்னி கூறியுள்ளார்.

கனடாவில் புகலிடம் கோருவதற்காக மக்கள் அமெரிக்காவை விட்டு விட்டு வருவதை ஏற்றுக்கொள்ள இயலாது என்று கார்னி கூறியுள்ளார்.

The Canada-U.S. Safe Third Country Agreement என்னும் ஒப்பந்தத்தின்படி, அப்படி அமெரிக்காவிலிருந்து கனடாவுக்கு வருபவர்களை நம்மால் அமெரிக்காவுக்கே திருப்பி அனுப்பிவிடமுடியும் என்று கார்னி கூறியுள்ளார்.

அமெரிக்காவில் சூழ்நிலை மாறிவிட்டது என்று கூறியுள்ள அவர், புகலிடக்கோரிக்கையாளர்கள் அலை போல் வரும் நிலைமை உருவாகலாம், ஆகவே, இந்த விடயத்தைக் கையாள அமெரிக்காவும் கனடாவும் இணைந்து செயல்பட்டாகவேண்டியுள்ளது என்றும் கூறியுள்ளார்.


## இந்தியக் குடும்பம் உயிரிழந்த விவகாரம்:

# மீண்டும் புதிதாக விசாரிக்க அமெரிக்க நீதிபதி மறுப்பு

கனடா எல்லையில் இந்தியக் குடும்பம் உயிரிழந்த விவகாரத்தில் மீண்டும் புதிதாக விசாரணை மேற்கொள்ள அமெரிக்க ஃபெடரல் நீதிபதி மறுப்பு தெரிவித்துள்ளார்.

கனடாவிலிருந்து அமெரிக்காவுக்குள் நுழையும் முயற்சி யின்போது, கனடா அமெரிக்க எல்லையில் பனியில் உறைந்து உயிரிழந்தது ஒரு இந்தியக் குடும்பம்.

2022ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 19ஆம் திகதி, இந்தியர்களான ஜனதீஷ் பட்டேல் (வயது 39), அவரது மனைவி வைஷாலி பென் (வயது 37), 02







# கனடாவின் பழிவாங்கல் புறக்கணிப்பால் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டும் அமெரிக்கா

கனடாவின் பழிவாங்கல் புறக்கணிப்பால் அமெரிக்கா சுமார் 4 பில்லியன் டொலர் வருவாய் மற்றும் 28,000 வேலை வாய்ப்பையும் இழக்கும் நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கனடாவில் இருந்து அமெரிக்க எல்லையைக் கடப்பதை தடுத்து நிறுத்தப்படும் என ஜனாதிபதி ட்ரம்ப் சபதமிட, பதிலளித்த கனேடிய மக்கள், தங்கள் பணத்தை அமெரிக்காவில் செலவிடுவதை கைவிட்டனர்.

கனடாவை இன்னொரு மாகாண மாக அமெரிக்காவுடன் இணைக்கப்படும் என ட்ரம்ப் மிரட்டல் விடுக்க, அமெரிக்காவுக்கு பயணப்படுவதையே கனேடிய மக்கள் நிறுத்திக் கொண்டனர்.

அத்துடன், அமெரிக்காவின் கடுமையான வரி விதிப்புக்கும் உரிய பதிலளித்துள்ளனர். மார்ச் மாதத்தில் மட்டும் காரில் அமெரிக்காவிற்கு பயணப்படும் கனேடிய மக்களின் எண்ணிக்கை 32 சதவீதம் சரிவடைந்துள்ளது.

இதற்கு முந்தைய மாதம் 23 சதவீதமாக இருந்தது. தொடர்ந்து மூன்றாவது மாதமாக சரிவு பதிவாகியுள்ளது. அத்துடன் கனடாவில் இருந்து அமெரிக்காவுக்கான விமான பயணங்களும் 13.5 சதவீதம் சரிவடைந்துள்ளது.

கனடாவின் எஃகு, அலுமினியம் மற்றும் வாகனங்களை குறிவைத்து வரி விதிக்க, கனேடிய மக்கள், கனடாவின் தயாரிப்புகளை மட்டுமே வாங்கும் முடிவுக்கு வந்தனர். பொதுவாக அமெரிக்காவுக்கு அதிகமாக பயணப்படும் சர்வதேச பயணிகள் வரிசையில் முதலிடத்தில் இருக்கும் நாடுகளில் கனடாவும் ஒன்று.

கடந்த ஆண்டு மட்டும் 20.5 பில்லியன் டொலர் தொகையை அமெரிக்காவில் செலவிட்டுள்ளனர். இதில் 10 சதவீதம் சரிவடைந்தால் கூட 2 பில்லியன் டொலர் வருவாய் இழப்பு ஏற்படும் என்பதுடன், 14,000 வேலை வாய்ப்புகளும் பாதிக்கப்படும்.

கார் மற்றும் விமான பயணங்கள் சரிவடைந்துள்ளதால் ஏற்படும் தாக்கம் என்பது 4 பில்லியன் டொலர் வருவாய் இழப்புக்கு காரணமாகும் என்றும் கூறுகின்றனர். அமெரிக்காவில் பொதுவாக கனேடிய மக்களால் அதிகம் பார்வையிடும் பகுதிகளான நியூயார்க்கின் பஃபலோ மற்றும் மைனேயில் உள்ள பழைய ஆர்ச்சர்ட் கடற்கரை போன்றவை கடுமையாக பாதிக்கப்படும்.

மட்டுமின்றி, கலிபோர்னியாவில் உள்ள பாம் ஸ்பிரிங்ஸ் போன்ற பகுதிகளில் கனேடிய மக்கள் புறக்கணிக்க வேண்டாம் என கெஞ்சும் அளவுக்கு நிலைமை சென்றுள்ளது.

ஆண்டுக்கு 300,000 கனேடியர்கள் பாம் ஸ்பிரிங்ஸ் பகுதிக்கு சுற்றுலா செல்வதுடன், பல மாதங்கள் தங்கியிருப்பார்கள் என்றே கூறப்படுகிறது. ஆனால் தற்போது கனேடிய சுற்றுலா பயணிகள் மெக்சிகோ மற்றும் கரீபியன் தீவுகளுக்கு அதிகமாக சுற்றுலா செல்ல துவங்கியுள்ளனர் என தரவுகள் வெளியாகியுள்ளன.



## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்பதியரின் பிள்ளைகளான விஹாங்கி (வயது 11) மற்றும் தர்மிக் (வயது 3) ஆகியோர், கனடாவின் மனித்தோபாவுக்கும் அமெரிக்காவின் மின்னசோட் டாவுக்கும் இடையில் அமைந்துள்ள எல்லை வழியாக, நடந்தே கனடாவிலிருந்து அமெரிக்காவுக்குள் நுழைய முயன்றுள்ளார்கள்.

ஆனால், பனியில் உறைந்து அவர்கள் நான்குபேரும் உயிரிழந்துவிட்டார்கள். ஆளுக்கொரு இடத்தில் அவர்கள் நால்வரும் உயிரிழந்து கிடந்த காட்சிகள் கடும் அதிர்ச்சியை உருவாக்கின.

இந்த சம்பவம் தொடர்பில், இந்தியக் குடிமகனான ஹர்ஷ்குமார் பட்டேல் என்பவரும், ப்ளோரிடாவைச் சேர்ந்த ஸ்டீவ் ஷாண்ட் என்பவரும் கைது செய்யப்பட்டார்கள்.

அவர்கள் இருவரும் குற்றவாளிகள் என நீதிமன்றம் முடிவுசெய்தது. ஆனால், அவர்கள் தரப்பிலிருந்து, மீண்டும் புதிதாக விசாரணை மேற்கொள்ள கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனால், அவர்களுடைய கோரிக்கையை அமெரிக்க ஃபெடரல் நீதிபதியான John Tunheim நிராகரித்துவிட்டார்.

ஹர்ஷ்குமார் பட்டேல் மற்றும் ஸ்டீவ் ஷாண்ட் ஆகிய இருவரும் இந்த வழக்கில் குற்றவாளிகள் என முடிவு செய்ய போதுமான ஆதாரங்கள் உள்ளன என அவர் கண்டறிந்துள்ளார்.

ஏற்கனவே மே மாதம் 7ஆம் திகதி இந்த வழக்கில் அவர் தீர்ப்பு வழங்க முடிவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




# கனடாவில் ரின்களில் அடைக்கப்பட்ட உணவுகளின் விலைகள் அதிகரிக்கும்

கனடாவில் ரின்களில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரின்களில் அடைக்கப்பட்ட ஒர் உணவுப் பொருளின் விலை 40 சதங்களினால் உயர்வடையும் என ஒன்டாரியோவில் இயங்கும் முக்கிய உணவுப் பொருள் பதப்படுத்தும் நிறுவனங்களில் ஒன்றான சன் பிரைட் புட்ஸ் இன்ங் நிறுவனம் எச்சரித்துள்ளது.

இது உலகளவில் உள்ள மிகப் பெரிய தக்காளி பதப்படுத்தும் நிறுவனங்களில் ஒன்றாகும். இந்த தக்காளிகளை சந்தைக்கு அனுப்புவதற்கு, பெரும்பாலான ரின் மூடிகள் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது என நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி ஜான் யாக்கொபெல்லி கூறியுள்ளார்.

இந்நிலையில், உருக்கு மற்றும் அலுமினிய பொருள்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி விதித்த சுங்க வரி காரணமாக இவ்வாறு பொருட்களின் விலைகள் உயர்வடையும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், அமெரிக்காவிலிருந்து ரின்களை உற்பத்தி செய்ய மூலப் பொருள் கொள்வனவு செய்யும் போது வரி காரணமாக கூடுதலான தொகை செலுத்த நேரிடுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.








## டொரொன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் டொரொன்டோ பொலிஸ் தெரிவித்துள்ளது.

கொலெஜ் ஸ்ட்ரீட், பத்திருஸ்ட் ஸ்ட்ரீட் அருகே உள்ள முக்கட்டடத்தில் இரண்டு அலாரம் அளவிலான தீ விபத்து ஏற்பட்டதாக டொரொன்டோ தீயணைப்பு துறை தகவல் வெளியிட்டுள்ளது.

தீயணைப்பு அதிகாரிகள் மூன்று பேரை கட்டடத்திலிருந்து மீட்டுள்ளனர். ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மற்ற இருவர் சிறிய காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கட்டடத்தின் முதல் மாடி வணிக நோக்கத்திற்கும், இரண்டாம் மற்றும் மூன்றாம் மாடிகள் வீட்டு வசதிக்கு மானவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீ விபத்து குடியிருப்பு பகுதியில் தொடங்கியதாகக் கூறப்படுகிறது.